# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.53/2023 | Date | : 19.08.2025 |
| Deposition of Witness for | : அ.சா.5 | Taluk | : |
| Name | : நாராயணன் | Calling | : |
| Father Name | : சின்னதம்பி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.08.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கோனேரிபட்டி கிராமம், பொன்னம்பாளையம், அத்திமரக்காட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சுப்ரமணி, எதிரி சின்னதம்பி ஆகியோரின் குடும்பம் எனக்கு மாமன் முறை ஆவார்கள், அவர்களும், நாங்களும் ஒரே ஊரில் தான் குடியிருந்து வருகிறோம். அவர்களுக்கு இடையே நிலம் சம்பந்தமாக தகராறு இருந்து வருகிறது.

2) சுமார் 03 வருடத்திற்கு முன்பாக, நான் எனது விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, எனது மாமா சுப்ரமணியை, அவரது மகன் தனசேகரன் டிராக்டர் ஏறிவிட்டதாக கூறி தூக்கி கொண்டுவந்தார். டிராக்டரை சின்னதுரை ஏற்றிவிட்டதாக கூறினார். நான் எனது மாமாவை என்னுடைய இருசக்கர வாகனத்தின்மூலம் கொண்டு சென்று, பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் பவானி, காளிங்கராயன்பாளையத்தில் ராஜமாணிக்கம் என்ற தனியார் மருத்துவமனையில்

சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

கடந்த 05-10-2022 ம் தேதி, காலை சுமார் 10.00 மணியளவில் ஆஜர் எதிரி, அவருடைய டிராக்டரின் மூலம் காய் பறித்து கொண்டிருந்த அவரது மாமாவின் மீது ஏற்றி காயப்படுத்தியதை நேரில் பார்த்ததாகவும், பின்னர் அவர் இனிமேல் தடம் கேட்டு வந்தால் டிராக்டரை ஏற்றி கொன்று விடுவதாக மிரட்டிவிட்டு, டிராக்டரை அதே இடத்தில்விட்டுவிட்டு ஓடிவிட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரியும் எனக்கு மாமா உறவுமுறை ஆவதால் தற்போது பிறழ் சாட்சியாக மாறி சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், காயமான பிறகு தான் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1) நான் மற்றும் எதிரி குடியிருக்கும் இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் 02 கி.மீ நடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அ.சா.1 சுப்ரமணிக்கு கல்லுக்குழி வழியாக அவரது வீட்டிற்கு செல்வதற்கு தடம் உள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது அ.சா.1 ஐ, அ.சா.2 கையில் தூக்கி கொண்டு வந்தார் என்றும், அ.சா.1 ஐ நான் மருத்துவமனைக்கு

அழைத்து சென்றேன் என்று கூறியுள்ளேனா என்றால் ஆமாம், நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிகொண்டு அ.சா.1 ஐ, பின்னால் உட்கார வைத்துகொண்டு சுமார் 10 கி.மீ சென்ற பிறகு தான் ஆம்புலன்ஸ் வந்தது.

2) ஆம்புலன்ஸ் வந்தவுடன் இருசக்கரவாகனத்தை நிறுத்திவிட்டு நாங்களும் ஆம்புலன்ஸ்ல் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அ.சா.1 பவானி மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் சுமார் 07 நாட்கள் இருந்தார். அந்த சமயத்தில் நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவர் மயக்க நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால், இவ்வழக்கு விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Sd/-Narayanan

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.53/2023 | Date | : 19.08.2025 |
| Deposition of Witness for | : அ.சா.6 | Taluk | : |
| Name | : அண்ணாமலை | Calling | : |
| Father Name | : அம்மாசி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.08.2025.

<u>(எதிரி ஆஜர்).</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளிவெள்ளி கிராமம், சென்டாங்காட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 02-03 வருடங்களுக்கு முன்பு, எனது மாமா அ.சா.1 சுப்ரமணிக்கும், சின்னதுரைக்கும் வண்டித்தடம் சம்பந்தமாக தகராறு இருந்தது. அது சம்பந்தமாக தேவூர் போலிசார் சம்பவ இடம் வந்து விசாரித்துகொண்டிருந்தனர்.

2) போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், பெருமாளும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1வது சாட்சி கையொப்பம் பெருமாள் என்பவருடையது ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

3) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுகொண்டதற்காக நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது மாமா என்பதால் நான் காவல் நிலைத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, போலிசார் கேட்டுகொண்டதற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Annamalai

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.